செ.வெ.எண்: 187.

செய்தி வெளியீடு

நாள்: 11.03.2008

**சென்னை மாநகராட்சி பள்ளியில் பணியாற்ற 25 தமிழ்வழி இடைநிலை ஆசிரியர்களுக்கான பணி நியமன ஆணைகள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வழங்கினார்**

மாநகராட்சி பள்ளிகளில் கல்வியின் தரத்தை உயர்த்த சென்னை மாநகராட்சி பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. சென்னை மாநகராட்சி கட்டிடத் துறை மூலம் 103 பள்ளி வகுப்பறைகள் மற்றும் 8 ஆய்வுக் கூடங்கள் ரூபாய் 8.86 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 106 பள்ளி வகுப்பறைகள், 2 ஆய்வுக்கூடங்கள் ரூபாய் 8.89 கோடியில் கட்ட அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. அதனைத் தொடர்ந்து 28 பள்ளி வகுப்பறைகள் ரூபாய் 1.48 கோடியில் மேற்கொள்ளப்படவுள்ளன.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 1996 முதல் 2001 வரை சென்னை மாநகர மேயராக இருந்தபொழுது ஆயிரத்து 241 ஆசிரியர்கள், சென்னை மாநகராட்சி பள்ளியில் நியமிக்கப்பட்டனர். ஆனால் கடந்த கால அஇஅதிமுக ஆட்சியில் 207 ஆசிரியர்கள் மட்டுமே சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கு நியமிக்கப்பட்டனர். மீண்டும் 2006ம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பின்னர் சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கு 22 முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள், 22 பட்டதாரி ஆசிரியர்கள், 23 உருதுமொழி இடைநிலை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து மேலும் 25 தமிழ்வழி இடைநிலை ஆசிரியர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்வு செய்யப்பட்டு சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கு நியமனம் செய்யப்பட தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கான பணி ஆணையை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் இன்று (11.03.2008) வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

தற்போது நியமனம் செய்யப்பட்டவர்களைத் தவிர சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கு மேலும் கூடுதலாக 50 தமிழ்வழி இடைநிலை ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மாநகராட்சி மேயர் திரு.மா.சுப்பிரமணியன், மாநகராட்சி ஆணையர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., துணை மேயர் திருமதி.ஆர்.சத்தியபாமா, மன்ற ஆளுங்கட்சித்தலைவர் திரு.ந.இராமலிங்கம், மன்ற எதிர்க்கட்சித்தலைவர் திரு.சைதை ப. ரவி, கூடுதல் ஆணையர்(கல்வி) திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., நிலைக்குழுத்தலைவர்(கல்வி) திருமதி. கே.ஜானகி, நிலைக்குழுத்தலைவர்(பணிகள்) திரு.எஸ்.சுரேஷ்குமார், நியமனக் குழு உறுப்பினர்கள் திரு.முத்துகிருஷ்ணன், திரு.வேலாயுதம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.